இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA1 பரீட்சை - ஜனவரி 2018

**(January 2018 Examination - AA1 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA13**

# வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் (EBA)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்
கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

# AA1 பரீட்சை – ஜனவரி 2018
# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்
## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறுநோக்க தேர்வு வினாக்கள் (OTQs)**
**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**வினா 1 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

| வினா இலக்கம் | விடைகள் |
|---|---|
| 1.1 | 1 |
| 1.2 | 4 |
| 1.3 | 4 |
| 1.4 | 1 |
| 1.5 | 4 |
| 1.6 | 4 |
| 1.7 | 2 |
| 1.8 | 3 |
| 1.9 | 2 |
| 1.10 | 4 |
| 1.11 | தவறு |
| 1.12 | தவறு |
| 1.13 | சரி |
| 1.14 | சரி |
| 1.15 | சரி |
| 1.16 | சந்தை |
| 1.17 | எல்லை உற்பத்தி |
| 1.18 | உற்பத்தியாளர் மிகை |
| 1.19 | 4% |
| 1.20 | பொருளாதார வளர்ச்சி |

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**(04 கட்டாய வினாக்கள்) நான்கு வினாக்களுக்கும் விடையளிக்க.**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

## வினா 2 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) உற்பத்தி காரணிகள் (பொருளாதார வளங்கள்) நான்கினை விபரிக்க.

**நிலம்**

நிலம் எனப்படுவது உற்பத்திக்கு பயன்படுத்தபடும் புவியின் மேற்பரப்புக்கு மேலும் கீழும் உள்ள அனைத்து வகையிலான இயற்கையின் கொடையினை குறிக்கும். உதாரணமாக ஆறு, குளம், கடல், காடுகள், கனியங்கள், எண்ணெய், வனஜீவிகள் மற்றும் மீன்கள் போன்றன. மனிதனின் தொடர்ச்சியான பயன்பாட்டினால் குறித்த இயற்கை வளங்களானது அருகிவருகின்றதுடன் மீள புதுப்பிக்கபட முடியாதவையாகவும் காணப்படுகின்றது. உதாரணமாக பெற்றோலிய வளங்கள். நில வளங்களின் கொடுப்பனவாக வாடகை பெறப்படுகின்றது.

**உழைப்பு**

உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மனிதனின் உடல், உள இயலுமைகளை உழைப்பு என வரையறை செய்யப்படுகின்றது. உழைப்புக்கு கொடுப்பனவாக கூலி கொடுக்கப்படுகின்றது. தொழிற்திறனுக்கு ஏற்ப மனித மூலதனம் பலதரப்பட்டு காணப்படுகின்றது. மனித மூலதனத்தின் அளவானது பின்வரும் காரணிகளின் அடிப்படையில் தங்கியுள்ளது.

1. மக்கள் தொகையின் அளவு
2. அவர்களின் சுகாதாரம் மற்றும் உடல் திறன்
3. அவர்களின் கல்வியறிவு மற்றும் தொழிற்திறன்

**மூலதனம்**

உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்து வளங்களும் மூலதனம் எனப்படும். இது வளர்ச்சியடைய கூடிய ஒரு உற்பத்தி காரணியாக கருதப்படுவதோடு மூலதனத்துக்கு கிடைக்கும் வெகுமானம் வட்டி ஆகும். மேலும் கட்டிடம், உபகரணம், வாகனங்கள் என்பன மூலதன வளங்களாகும். பொருளியலில் மூலதனம் என்பது பணச் சொத்துக்களை குறிப்பதில்லை ஏனெனில் பணத்தினால் சுயேட்சையாக எதனையும் உற்பத்தி செய்ய முடியாது, ஆகையால் பணமானது மூலதன சொத்துக்களை உள்ளடக்கிய சொத்துக்களின் பெறுமதிக்கான ஒரு அளவீட்டை மாத்திரமே வழங்குகின்றது. முலதன பொருட்கள் அதன் பாவனை காலத்திற்கு ஏற்ப பெறுமான தேய்வு செய்யப்படுகின்றது.

**முயற்சியாண்மை**

மனிதனின் ஆக்கபூர்வமான இயலுமைகள் மூலம் புதிய அல்லது ஏற்கனவே இருக்கின்ற பொருட்கள் சேவைகள் உற்பத்தினை கொண்டு இலாபம் உழைத்தலை முயற்சியாண்மை குறிக்கும். மேலும் இதற்கு கிடைக்கும் வெகுமானம் இலாபம் எனப்படும். இவ் இலாபத்தின் மீதுள்ள நாட்டத்தின் காரணமாக இடர்களை ஏற்க தாயாராகவுள்ள ஓர் உந்தப்பட்ட தனிநபர் முயற்சியாளர் என வரையறுக்கப்படுகின்றார்

**(06 புள்ளிகள்)**

(b) i. சமநிலை விலை

சமநிலை விலையின் போது Qd = Qs

100-2p = -50+3p

150 = 5p

**30 = P**

**(02 புள்ளிகள்)**

ii. சமநிலை கணியம்

கேள்வி சமன்பாட்டினை பதீலீடு செய்யும் போது

Qd = 100 – 2p

Qd = 100 – ( 2*30)

**Qd = 40**

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 3 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்


(a)

**குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி**

தரப்பட்ட நிலையான காரணி அலகுகளை பயன்படுத்தி மாறும் காரணிகளின் அலகுகளை அதிகரிக்கும் பொழுது மாறும் காரணிகளின் எல்லைஉற்பத்தி மற்றும் சராசரி உற்பத்தி காலப்போக்கில் வீழ்ச்சியடையும் என்பதை குறிப்பிவதே குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி ஆகும்

உதாரணம் : ஐஸ் கீரீம் பயன்பாட்டு கொள்ளளவு தரவுகள் வருமாறு:-

| **ஐஸ்கீரீம் கொள்ளளவு அலகுகள்** | **மொத்த பயன்பாடு** | **எல்லை பயன்பாடு** |
|---|---|---|
| 1 | 10 | 10 |
| 2 | 19 | 9 |
| 3 | 27 | 8 |
| 4 | 34 | 7 |
| 5 | 40 | 6 |
| 6 | 45 | 5 |
| 7 | 49 | 4 |
| 8 | 51 | 2 |
| 9 | 51 | 0 |
| 10 | 50 | -1 |
| 11 | 48 | -2 |




இங்கு நுகர்வோரினது இலக்காக கருதப்படுவது, திருப்தி மட்டம் மற்றும் மொத்த பயன்பாட்டினை மிகைப்படுத்துவதாகும். ஆனால் இவை இரண்டு வரையறைக்குள்ளே மேற்கொள்ளப்படவேண்டும். முதலாவது ஒருவரினது வருமானமானது வரையறைக்குட்பட்டது, மேலும் இதனையே சிக்கன கடப்பாடு என சொல்லப்படுகின்றது. இரண்டாவது பொருட்கள், சேவைகள் மீதான சந்தை விலையானது அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது என்பதாகும்.

**(06 புள்ளிகள்)**

(b) கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள் நான்கினை கூறுக?

- குறித்த பண்டத்தின் விலை
- பிரதியீட்டு பண்டத்தின் விலை
- நுகர்வோரின் வருமானம்
- நுகர்வோரின் சுவை மற்றும் முக்கியத்துவம்
- இதர காரணிகள்
  - எதிர்கால சந்தை விலை நடவடிக்கை
  - சந்தையுள்ள நுகர்வோர்களின் எண்ணிக்கை
  - காலநிலை மாற்றங்கள்
  - விளம்பரம்
  - நாகரீகம்
  - பழக்கவழக்கங்கள்
  - மக்கள் தொகை
  - வருமான பங்கீடு

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 4 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(a) அரசு வரவு செலவு திட்டத்தின் நான்கு பண்பியல்புகளை விபரிக்க?**

(i) எதிர்வரும் நிதியாண்டுக்கான பாதீடு தாயாரிக்கப்படும்

(ii) இது எதிர்வரும் நிதியாண்டுக்கான எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளை பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாகவே அமையும்

(iii) இது அரச செலவீனங்களுக்கான வருமானம் ஈட்டும் மார்க்கங்களை உள்ளடக்கியதாக அமையும்.

(iv) ஏதேனும் பற்றாக்குறைகள் காணப்படுமிடத்து அவற்றை நிவர்த்திசெய்வதற்கான நிதி திரட்டும் உத்திகளை பாதீடு கொண்டிருக்கும்.

(v) அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை உள்ளடங்கியதாக காணப்படும்.


**(04 புள்ளிகள்)**

**(b)** அரசாங்கத்தினால் நேரில் வரியாக பண்டமொன்றிற்கு அலகு வரி விதிக்கப்படுவதனால் ஏற்பட கூடிய விளைவுகளை எடுத்துரைக்க?

**அலகு ஒன்றிற்கான தனிச்சிறப்பு வரி**

அரசாங்கம் சந்தையில் விற்கப்படும் பண்டத்தின் தொகைக்கு விதிக்கப்படும் அலகு வரியானது சந்தையில் அவ் பண்டத்தின் நிரம்பல் வளையியானது உள்நோக்கி நகரும் அல்லது வரி பெறுமதின் அடிப்படையில் நிரம்பல் கோடு இடதுபுறம் நகரும், மேலும் வரி ஆனது நிரம்பல் வளையி இல் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எடுகோள் கருத்திற் கொள்ளப்படுகின்றது, ஆகையால் கீழ் கொடுக்கப்பட்டள்ள வரைபடம் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்கிடையே வரி பகிரப்படும் விதத்தினை எடுத்துரைக்கின்றது.

- எவ்வாறாயினும் நுகர்வோர் மற்றும் விற்பனையாளர் இடையிலான வரிச்சுமை பங்கீடானது பண்டத்தின் கேள்வி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சி அடிப்படையில் அமையப்பெற்றது.
- அரசாங்கம் ரூபா.15 வரியாக விதித்துள்ளது



வரைபடத்தில் சந்தை சமநிலை விலை வரிக்கு முன் ரூபா.30/- ஆகவும், அரசு அலகு வரியாக ரூபா.15/- அறவிட்டபட்ட விளைவாக, நிரம்பல் கோடானது (S – S1) ஆக நகர்ந்தது. மேலும் விலையானது ரூபா.40/- ஆக உயர்ந்தது. இதனை விரிவாக நோக்கினால் நுகர்வோர வரிச்சுமை ஆக ரூபா.10/- வையும் மற்றும் உற்பத்தியான் / விற்பனையாளன் வரிச்சுமையாக ரூபா.05/- வையும் சுமக்கின்றனர்.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 5 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(a) ஒப்பீட்டு நயம் மற்றும் முழு நயம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை விளக்குக?**

ஒரு நாடு பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒரு அலகுகினை உற்பத்தி செய்ய ஏற்படும் செலவு ஆனது ஏனைய நாடுகள் அவ் உற்பத்தி மேற்கொள்ள ஏற்படும் செலவினை விட குறைவாக காணப்படும் ஆயின் அது முழு நயம் எனப்படும். ஆனால் ஒப்பிட்டு நயம் ஆனது சந்தர்ப்ப செலவினை அடிப்படையாக கொண்டு அமையப்பெற்றது, இங்கு பெற்றுக்கொள்ளப்படும் பயன்யானது, அவ் பயன்பாட்டிற்காக இழக்கப்படும் மாற்று உற்பத்தி வாய்ப்பினை அடிப்படையாக கொண்டு அமையப்பெற்றது. ஒரு நாடு ஏனைய நாடுகளை விட குறைந்த அமையச்செலவில் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யுமாயின் அது ஒப்பீட்டு நயம் ஆகும்.

**உதாரணம்:-**

பிரான்ஸ் மற்றும் இத்தாலி நாடுகளில் உள்ள வளங்களை பயன்படுத்தி வைன் அல்லது சீஸ் உற்பத்தி செய்ய முடியும் ஆனால் இரண்டையும் உற்பத்தி செய்ய முடியாது. பிரான்ஸ் 20 அலகுகள் வைன் அல்லது 10 அலகுகள் சீஸ் உற்பத்தி செய்ய முடியும் இங்கு சந்தர்ப்ப செலவானது ஒவ்வொரு வைன் உற்பத்தியும், சீஸ் உற்பத்தின் அரைவாசி ஆகும். இங்கு 10 அலகுகள் சீஸ் உற்பத்தியை 20 அலகுகள் வைன் உற்பத்தியால் பிரித்தால் வருவது சந்தர்ப்ப செலவு ஆகும். இரண்டு அலகு வைன் உற்பத்திகள் சீஸ் உற்பத்தியின் கிரயமாகும்.

இத்தாலியில் 30 அலகுகள் வைன் மற்றும் 22 அலகுகள் சீஸ் என்பன முழு நயத்துடன் உற்பத்தி செய்ய முடியும். இங்கு சீஸ்க்கான சந்தர்ப்ப செலவு 1.36 வைன் அலகுகள் ஆகும், அத்துடன் வைனுக்கான சந்தர்ப்ப செலவு 0.73 சீஸ் அலகுகள் ஆகும்.

பிரான்ஸ் ஒப்பீட்டு நயத்துடன் வைன் இனையும், இத்தாலி ஒப்பீட்டு நயத்துடன் சீஸ் ஐயும் உற்பத்தி செய்ய முடியும்.

**(04 புள்ளிகள்)**

**(b) சர்வதேச வர்த்தகத்தின் பிரதிகூலங்கள் மூன்றினை விபரிக்க ?**

i. தீங்கினை ஏற்படுத்தும் பொருட்களை இறக்குமதி செய்தல் உதாரணமாக சிகரட், போதை பொருட்கள் போன்றவை நாட்டின் குடியிருப்பாளர்களின் நலனை பாதிக்கும்.

ii. இது வளங்களை முழுமையாக அழித்துவிடலாம்.

iii. மிகையான சிறப்புதேர்ச்சியானது ஒரு நாட்டிற்கு பாரிய இடரினை ஏற்படுத்தலாம்.

iv. ஒரு நாடானது தன்னுடைய உணவுக்காக முக்கியமாக வெளிநாடுகளில் தங்கியிருக்கலாம். யுத்த காலத்திலே அவ்வாறான நாடுகளுக்கு அடிப்படை உணவுப் பொருட்கள் கிடைக்காது பாரிய ஆபத்தானதாக காணப்படும்.

v. ஒரு நாடு இன்னொரு நாட்டின் செலவீனத்தில் ஆதாயம் பெறமுடியும்.

vi. சர்வதேச வியாபாரமானது புதிய சந்தைகளையும் அவர்களுடைய தொழிற்துறைக்கான மூலப்பொருட்களின் முலகங்களையும் கண்டறியும் நாடுகளுக்கிடையிலான போட்டியினால் நாடுகளுக்கிடையில் பல பிரச்சனைகளை உருவாக்க வழிவகுக்கலாம்.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C

**கட்டாய வினா.**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

## வினா 6 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(A) (a) மொத்த உள்நாட்டு செலவு**

மொத்த உள்நாட்டு செலவு = தனியார் நுகர்வு செலவு + அரச பொது நுகர்வு செலவு + மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம்

மொத்த உள்நாட்டு செலவு (GDE) = 1,000 + 1,500 + 2,500

**மொத்த உள்நாட்டு செலவு (GDE) = 5,000 மில்லியன்**

**(04 புள்ளிகள்)**

**(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சந்தை விலையில்**

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) = GDE + நிகர ஏற்றுமதிகள்

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) = 5,000 + 1,300

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) = 6,300 மில்லியன்**

**(02 புள்ளிகள்)**

**(c) மொத்த தேசிய உற்பத்தி (GNP) சந்தை விலையில்**

மொத்த தேசிய உற்பத்தி (GNP) = GDP + வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்

மொத்த தேசிய உற்பத்தி (GNP) = 6,300 + 650

**மொத்த தேசிய உற்பத்தி (GNP) = 6,950 மில்லியன்**

**(02 புள்ளிகள்)**

**(d) தேறிய தேசிய உற்பத்தி (NNP) சந்தை விலையில்**

தேறிய தேசிய உற்பத்தி (NNP) = GNP + பெறுமானத் தேய்வு

தேறிய தேசிய உற்பத்தி (NNP) = 6,950 - 500

**தேறிய தேசிய உற்பத்தி (NNP) = 6,450 மில்லியன்**

**(02 புள்ளிகள்)**

(B) ஒரு நாட்டில் பணக்கொள்கை (Monetary Policy) மற்றும் இறைக்கொள்கை (Fiscal Policy) என இரண்டு பேரின பொருளாதார கொள்கைகள் காணப்படுகின்றது

**இறைக்கொள்கை (Fiscal Policy)**

அரசினுடைய செலவீன மற்றும் வருமான கொள்கைகள் பேரின பொருளாதார நிலைமைகளில் செல்வாக்கு செலுத்தக்கூடியதாகும்.

இறைக்கொள்கையின் முக்கிய மூலகங்கள் ஆவன:-

- வுரி
- அரச செலவீனம்

- பொது கடன்கள்
- பாதீடு
- பொது நடவடிக்கைகள்

**(04 புள்ளிகள்)**

(C)

ஒரு நாட்டில் பொது விலை மட்டத்தில் ஏற்படும் ஓர் உறுதியான அதிகரிப்பு பணவீக்கம் என அழைக்கப்படுகின்றது. கேள்வி தூண்டல் பணவீக்கம் (Demand Full Inflation ) மற்றும் செலவு உதைப்பு பணவீக்கம் (Cost Push Inflation) என இரு வகைப்படும்.

**(a) கேள்வி தூண்டல் வீக்கத்துக்கு பணவீக்கம் (Demand Full Inflation)**

மொத்த நிரம்பலை விட மொத்த கேள்வி மட்டமானது அதிகரிக்கும் போது கேள்வி தூண்டல் பணவீக்கம் ஏற்படும். அதாவது பொருளாதாரத்தில் முழு வேலையாண்மை காணப்படும் விடத்து மொத்த கேள்வி மட்ட உயர்வானது மறைமுகமாக தூண்டல் வீக்கத்துக்கு காரணமாக அமையும். மேலும் அதேவேளை பொருளாதாரத்தில் வேலையிண்மை காணப்படுமாயின் மொத்த கேள்வி மட்ட உயர்வானது அதி வேகமான வெளிநோக்கான தூண்டல் வீக்கத்துக்கு வழிவகுக்கும். மிகவும் அதிகமான பணம் குறைந்த அளவான பொருட்களை துரத்தி செல்கின்றன. (Too much money chasing too few goods)

**கேள்வியை அதிகரிக்கும் காரணிகள்**

(a) பண நிரம்பல் வீதத்தின் அதிகரிப்பை விட பொருட்கள் சேவைகள் வெளியீட்டு வீதம் அதிகமாக காணப்படல்

(b) பாதீட்டு சென்மதி நிலுவையை அடைப்பதற்கு அரசு வங்கிகளில் கடன் பெறுதல்

(c) வங்கிகளின் கடன்களை விஸ்தரித்தல்

(d) ஏற்றுமதி அதிகரிப்பு மூலம் அந்நிய செலவாணியை ஈட்டிக்கொள்ளல்

(e) பணவீக்கதில் ஏற்படும் மாற்றம் விலை அதிகரிப்புக்கு வழிவகுத்து தற்போதைய கேள்வி தூண்டலை அதிகரித்தல்

**(03 புள்ளிகள்)**

**(b) பணவீக்கத்தினை குறைக்க ஒரு நாட்டினால் எடுக்கப்படும் 3 நடவடிக்கைகள்**

01. நாணய கொள்கை - அதிகரிப்பு வட்டி வீதங்கள். இதனால் கடன் பெறுவனவுகள் அதிகரித்து செலவுகளை கட்டுப்படுத்தல். இதனால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.
02. கட்டுப்பாடான இறைக்கொள்கை- அரச செலவு குறைப்பு, வரி விதிப்பை அதிகரித்தல் மற்றும் வட்டி வீதங்கள் அதிகரித்தல். இதனால் மொத்த கேள்வி குறைவடைந்து விளைவாக குறைவான பணவீக்கத்தினை உருவாக்குவதுடன் கேள்வி தூண்டல் வீக்கத்துக் பணவீக்கத்தினையும் குறைக்கும்.
03. நிரம்பல் மீதான கொள்கைகள் - இதன் நோக்கம் நீண்ட கால போட்டி தன்மையை உருவாக்கல் உ+ம் :- தனியார்மயப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகளை தகர்த்துவதன் மூலம் வியாபாரத்துகான செலவு குறைவடையும் இதனால் பணவீக்கம் குறையும்.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

## பிரிவு *C* இன் நிறைவு

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".
The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designed especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*